
# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
வைகாசி 7
ஜமா. ஆகி. 13
ஞாயிறு (21-5-1978)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 99
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 60


# "பயமுறுத்தலும் மிரட்டலும் எம்மிடம் பலிக்கவே பலிக்காது!"

## செல்வா வழியிற் செல்லும் நாங்கள் எந்த விளைவையும் சந்திக்க தயார்!

### பேரவையில் பிரச்சினை கிளப்பியோருக்கு அமிர் அளித்த சூடான பதில்!



"உங்களின் மிரட்டலும், அச்சுறுத்தலும் எம்மிடம் ஒருபோதும் பலிக்கவே பலிக்காது என்பதை இச்சபையிலுள்ள உறுப்பினர்களுக்கும், நாட்டு மக்களுக்கும் நான் கூறிவைக்க விரும்புகிறேன். நாங்கள் காந்திய வழியில் தந்தை செல்வா கட்டியெழுப்பிய ஓர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். ஏதாவது ஒரு கட்டத்தில் எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த யாராவது ஓர் உறுப்பினர் மீதாவது, அல்லது இயக்கத்தின் மீதாவது பொறுப்பு சுமத்தப்படுமானல், அதன் விளைவை எதிர்கொள்ளவும், அனுபவிக்கவும் நாம் தயாராக இருக்கிறோம்."

—இவ்வாறு தமிழர் தலைவரும், சிறிலங்கா தேசிய அரசுப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் 2-5-78ல் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஐ.தே. கட்சியைச்சேர்ந்தவரான வியாலுவ உறுப்பினர் திரு. வீரவன்னி சமரவீரா ஒத்திவைப்புப் பிரேரணையின் போது சிங்களத்தில் எழுப்பிய பிரச்சினைக்கு பதிலளித்து இடையீடுகளுக்கும் நாலாபுறமிருந்து வந்த கூச்சல்களுக்குமிடையே திரு. அமிர்தலிங்கம் தனக்கேயுரிய கம்பீரத்தொனியில் தேசிய அரசுப் பேரவைக் கட்டடமே அதிர பதிலளித்தார்.

திரு. வீரவன்னி பேசிக்கொண்டிருக்கும்போது திரு. அமிர்தலிங்கம் குறுக்கிடுகிறார்.

அமிர்:-சபாநாயகர் அவர்களே, நான் ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புகிறேன் (இடையீடுகள்) நீங்கள் விரும்பிய அளவு சத்தமிடலாம். ஆனலும், ஒழுங்குப் பிரச்சினை கிளப்புவதற்கு எனக்கு உரிமையுண்டு. நான் ஒழுங்கு பிரச்சினை கிளப்பியுள்ளேன். நான் சபாநாயகரைக் கேட்டுக் கொள்ளுகிறேன். [இடையீடு]

சபாநாயகர்; நீங்கள் உங்கள் ஒழுங்குப்பிரச்சினையை முன்வைக்கலாம்?

அமிர்தலிங்கம்: எதிர்க்கட்சித் தலைவராகிய எனக்கு பொத்துவில் இரண்டாவது பிரதிநிதி கொலைமுயற்சியுடன் சம்பந்தமிருப்பதாக இங்கு எனக்கெதிராக திட்டவட்டமான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

உறுப்பினர்கள்: இல்லை!

எம். சிவசிதம்பரம்: அவர் (வீரவன்னி) அவ்வாறு கூறியிருக்கிறார்!


சபாநாயகர்! சபை லிகிதர் நிருபர்களிடமிருந்து நிகழ்ச்சிக் குறிப்புக்களைப் பெற்று, அவ்வாறான பேச்சு இங்கு கௌரவ வியாலுவ உறுப்பினரால் (வீரவன்னி சமரவீரா) நிகழ்த்தப்பட்டிருக்கிறதா என்பதை தயவு செய்து ஆராய்ந்து பார்ப்

—5-ம் பக்கம் பார்க்க

## திருக்குறள் மாநாடு கோலாகல ஆரம்பம்!

தமிழ் மறைக் கழகத்தின் திருக்குறள் மாநாடு 20-5-78 சனிக்கிழமை பிற்பகல் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் கோலாகலமாக ஆரம்பமாகிறது. திருக்குறள் ஏட்டுச் சுவடி ஊர்வலத்துடன் ஆரம்பமாகும் இந்த மாநாட்டை தமிழர் தலைவர் திரு. அமிர்தலிங்கம் ஆரம்பித்து வைக்கிருர். மூன்று நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் மூன்று நாட்களும், தமிழக அறிஞரும், தென்மொழி ஆசிரியருமான பாவலர் பெருஞ்சித்திரனர் சிறப்புரை நிகழ்த்துகிருர்,

(உள்ளே சிறப்பிதழ்)



...BERATION TIGERS OF THAMIL EALAM

2-5-78ல் தேசிய அரசுப் பேரவையில் வியலுவ தொகுதி பா. உ; திரு. வீரவன்னியால் பிரச்சினை கிளப்பப்படுவதற்கு காரணமாக இருந்சுதும் வீரகேசரி 28-4-78 இதழில் வெளியிடப்பட்டிருந்ததும் தமிழீழ விடுதலைப்புலிகள் என்று சொல்லப்படுவதுமான இயக்கம் அனுப்பி வைத்த கடிதம் இதுதான், இந்த இயக்கத்தையும் இதுபோன்ற இயக்கங்களையும் தடைசெய்யவே 18-5-78ல் விசேட சட்டம் தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்கப்படுகிறது.

## முன்கூட்டியே வருகிறது இவ்வார சுதந்திரன்

புங்குடுதீவில் நடைபெறும் திருக்குறள் மாநாட்டையொட்டி இந்த இதழ் சுதந்திரன் 18.5.78 வியாழக்கிழமையே வெளியிடப்படுகிறது என்பதை வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி, கே. பரமேஸ்வரி,
கரவெட்டி.

கே: செயலதிபர்கள் 'அமிர்', 'சிவா' இருவருக்குமிடையில் சில ஒற்றுமைகள் இருக்கின்றன. அந்த ஒற்றுமைகள் என்னவென்று கூறும். பார்ப்போம் குயுக்தியாரே.

ப: அமிர்தலிங்கத்திடம் இயக்கம் சம்பந்தமான எந்த முக்கிய விடயத்தையிட்டு கேட்டாலும், ஒருக்கால் சிவாவுடன் யோசித்துவிட்டு செய்வோம் என்பார்; அதே போல சிவாவிடம் எந்த சின்ன விஷயத்தையிட்டும் கேளுங்கள்—உடனே அமிருடன் கலந்து பேசித்தான் சொல்லவேண்டும் என்பார். இருவரும் தமிழின ஐக்கியக் கோட்டையின் அத்திவாரமாக விளங்குகிறார்கள். இருவரது பெயர்களும் 'M' என்ற எழுத்தில் முடிகின்றன. அந்த அளவுக்கு பெயரிலும் இருவருக்கும் ஒற்றுமையிருக்கிறது.

ஃ

கே. ச. சிறீதரன்.
தெல்லிப்பளை.

கே: தமிழினத்தலைவரும் சிந்தனைச் சிற்பியுமான திரு. கதிரவேற்பிள்ளை அவர்களைப்பற்றி சில வார்த்தைகள் கூறுங்கள்!

ப: தந்தை செல்வாவிடமிருந்த சாந்தமும், அமைதியும், பொறுமையும், நிதானமும் திரு. கதிரவேற்பிள்ளையிடம் அப்படியே இருக்கின்றன. இடமாற்றம் போன்ற சில்லறை விடயங்களையிட்டு அவரிடம் யாராவது பேசப் போனால், அப்புறம் சாதுமிரண்ட மாதிரித்தான்! அற்ப சலுகைகளை கோரி மந்திரியின் அலுவலகப்படியில் ஒருபோதும் மிதித்தறியாதவர் திரு. கதிரவேற்பிள்ளை.

ஃ

கணேஸ்,
புலோலியூர்.

கே: மட்டுநகர் முதலாவது பிரதிநிதி செ. இராசதுரை அவர்கள் வடபகுதி மக்களாகிய எமக்கு ஆறுதல் கூறி ஒரு சில வார்த்தைகளை சுதந்திரன் வாயிலாக வெளியிடுவாரா?

ப: அவர் அப்படி ஒரு அறிக்கையை சுதந்திரனுக்கு அனுப்பிவைத்தால், சுதந்திரன் அதை வெளியிடத் தயாராக இருக்கிறது என்ற உறுதியை மட்டுமே நான் உங்களுக்குத் தரமுடியும்!

ஃ

செ. அருணாசலம்,
5ம் வார்ட்,
திரியாய்.

கே: மட்டுநகர் முதல்வருக்கு எதிராக தேர்தல் காலத்தில் த. வி. கூட்டணியின் நடவடிக்கைக்குழுவின் முடிவை மீறி தாங்கள் காசி ஆனந்தனை ஆதரித்து பிரசார மேடையில் பேசியுள்ளீர்கள்; இதற்காக தங்கள் மீது ஏன் நடவடிக்கை யெடுக்கவில்லை?

ப: தமிழர் விடுதலைக்கூட்டணியின் நடவடிக்கைக் குழு அப்படியொரு கட்டளையை எப்போதாவது எனக்குப் பிறப்பித்து, அக்கட்டளையை நான் மீறியிருந்தால் அல்லவா என் மீது நடவடிக்கையெடுக்கமுடியும்? காசிஆனந்தன் என்னை அழைத்தார்; அதனால் சென்றேன்; இராசுவும் என்னை அழைத்திருந்தால் எனது நிலையை புனராலோசனை செய்திருப்பேன்!

ஃ

முருகு பரமநாதன்,
கனகராயன் குளம்.

கே: தமிழ் ஈழம் மலர்ந்தபின் அது சனநாயக நாடாக இருக்குமா? அல்லது சோசலிச நாடுகளின் வரிசையில் சேருமா?

ப: அதை தமிழ்ஈழம் சுதந்திரநாடான பின்னர் தமிழ்ஈழமக்களே முடிவு செய்வார்கள்; ஆனால் தமிழர் விடுதலைக்கூட்டணியின் கொள்கைப்பிரகடனப்படி, அறிவியல் ரீதியான பூரண சமதர்ம நாடாகவே தமிழ் ஈழம் விளங்கும்!

கே: தமிழ்ஈழ அரசியலமைப்பில் சாதியும், தீண்டாமையும் சட்டத்தின் மூலம் தடைசெய்யப்பட்டு புதிய சமுதாயம் அமைக்கப்படுமா?

ப: "தமிழ் ஈழத்தில் சாதி ஒழிக்கப்படுவதோடு, கொடிய தீண்டாமையும் பிறப்பினால் மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு கற்பிக்கப்படும் அநீதியும் வேரோடு களையப்பட்டு, அதை எவ்விதத்திலும் அனுட்டிப்பது சட்டத்தினால் கடுமையான தண்டனைக்குள்ளாக்கப்படும்" என்கிறது கூட்டணியின் கொள்கை அறிக்கை!

ஃ

தி. செந்தில் நாதன்,
இ. கி. ச. இந்துக்கல்லூரி,
திருகோணமலை.

கே: தமிழ் மொழியில் பேசாது பிறமொழியில் பேசுவோரை "கனி இருப்ப காய் கவர்பவர்கள்" என்று சில இதழ்களுக்குமுன் குறிப்பிட்டிருந்தீர்கள். அப்படியானால் எதிர்க்கட்சித்தலைவர் திரு அ. அமிர்தலிங்கமும் மற்றும் சில பா. உ.க்களும் தமிழில் பேசக்கூடியதாயிருந்தும் ஆங்கிலத்திலேயே பேசுகிறார்களே. இவர்களையும் தாங்கள் கூறியதுபோல அழைக்கலாமா?

ப: எதிர்க்கட்சித்தலைவர் தமிழ் தெரியாதவர்கள் மத்தியில்தான் ஆங்கிலத்தில் பேசுகிறாரேதவிர- தமிழ் தெரிந்தவர்களின் சபையில் ஆங்கிலத்தில் பேசுவதில்லை. ஆனாலும், தேசிய அரசுப் பேரவையில் தமிழ் பேச்சுக்கள் குறைந்து இப்போது ஆங்கிலப் பேச்சுக்களே கூட்டணியின் பக்கத்திலிருந்து அதிகரித்துவருவதை காணக்கூடியதாக இருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் தேவை குறித்து ஆங்கிலத்தில் பேசினாலும். பெரும்பாலான தமது உரைகளை தமிழில் நிகழ்த்துவதற்கு கூட்டணி பா.உ.க்கள் முன்வரவேண்டும்!

---

கே: எங்கள் சுதந்திரன் பத்திரிகை ஆத்ம சிந்தனை உடைய பத்திரிகையா?

ப: ஆம், தந்தை செல்வாவின் ஆத்மீக ஒளிகாட்டும் வழியில் தன் பயணத்தை தொடரும் பத்திரிகை சுதந்திரன்!

ஃ

க. வெ. சிவகுரு,
34, அக்கராயன் குளம்.

கே: 'தமிழீழ நாட்டின் இறைமையை அங்கீகரிப்பீர்' என்ற தலையங்கச் செய்தியில் "மேதின விழாவில் சமர்ப்பிக்கப்படவிருந்த தீர்மானங்கள் வருமாறு" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அத் தீர்மானங்கள் மேதின விழாவில் நிறைவேற்றப்பட்டனவா இல்லையா?

ப: அப்படியே நிறைவேற்றப்பட்டன. சுதந்திரன் 3.5.78 இதழ் மேதினத்தன்று காலையிலேயே வெளிவந்துவிட்டது. அன்று மாலையே குறிப்பிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்படவிருந்தன. தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதற்கு முன்பே நிறைவேற்றப்பட்டதாக செய்திவெளியிடுவது தவறு என்ற காரணத்திலேதான் "சமர்ப்பிக்கப்படவிருந்த" என்ற சொல் செய்தியில் கையாளப்பட்டது.

கு சிவசோதி,
நாச்சிமார் கோவிலடி
அனலைதீவு

கே: சுயாட்சிக் கழகம் தேர்தல் முடிந்தபின் சுயபுத்தியின்றி சோம்பி கிடப்பது ஏன்? அவர்களுக்கும் தமிழீழ போராட்டத்திற்கும் தொடர்பு இல்லையா?

ப: சென்ற 1977 பொதுத் தேர்தலில் அவர்களுக்கும் இரண்டு தொகுதியை கூட்டணி ஒதுக்கியிருந்திருந்தால் ஒருவேளை இயங்கியிருப்பார்களோ என்னவோ? இயங்குவதென்பது வேறு; மற்றவர்களை விமர்சனம் செய்வதென்பது வேறு. சுயாட்சிக்கழகத்தினரின் பணி தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைகளை எட்டநின்று ஏளனம் செய்து விமர்சிப்பதுடன் முடிந்துவிடுகிறது போலும்!

ஃ

க செ அரியரத்தினம்
மாசார்
பளை

கே: நான் கிளிநொச்சித் தொகுதியில் உள்ள மாசாரில்வசிக்கிறேன். தமிழ் ஈழம் காணத்துடிப்பவன் நான் கூட்டணியில் உறுப்பினராக சேர என்ன செய்யவேண்டும்?

ப: உங்கள் தொகுதி கூட்டணி அமைப்பாளரான திரு வி ஆனந்தசங்கரி பா உ வுடன் தொடர்வு கொண்டால் அவர் என்ன செய்ய வேண்டுமென்று கூறுவார்.

ஃ

எம் எம் கே ஆனந்தா,
குமரசோட்டம்,
கொழும்பு-12

கே: ஈழம் வாழ் தமிழ் மக்களின் எதிர்காலம் யாருடைய கையில் இருக்கிறது?

ப: தமிழ் மக்களுடைய கையிலேதான் இருக்கிறது.

கே: தமிழ் அன்னையை உதைப்பவர்களுக்கு பதில் உதை எப்போது?

ப: திருப்பி உதைக்கின்ற அளவுக்கு எமதுகால்களுக்கு சக்தியை சேர்த்துக்கொண்ட பின்பு!

ஃ

இராசநாயகம்!
நல்லூர்,

கே: தமிழ் நாட்டிலிருந்து வெளியிடப்படும் நாலு முதலாளிகளின் பத்திரிகைகளை இங்கு வரவிடாமற் தடுப்பது நாலரைக்கோடி தமிழர்களின் விரோதத்தை சம்பாதிப்பது ஆகாது என்று 'சொக்கன்' யாழ் வளாகத்தில் கூறியிருந்தது பற்றி என்ன சொல்கிறீர்கள்?

ப: சுதந்திரன் ஆசிரியர் அங்கு கூறிய கருத்தை சொக்கன் புரிந்துகொள்ளவில்லை. குமுதம் வேண்டாம், இதயம் வேண்டாம் என்று சில பத்திரிகைகளை பெயர் குறிப்பிட்டுக் கூறுவதுவேறு; பொதுவாக இந்திய தமிழ் சஞ்சிகைகளே இங்கு வேண்டாம் என்பது வேறு; சுதந்திரன் ஆசிரியர் அங்கு கூறியது, 'இந்தியப் பத்திரிகைகளை எதிர்ப்பதென்பது இந்தியாவுக்கு எதிரான கோஷமாக மாறிவிடக்கூடாது; அப்படி மாறுமாயின் அதனால், தமிழ் இன உறவு பாதிக்கப்பட்டுவிடும்" என்பது தான்! தவிர, தனிப்பட்ட முதலாளிகளுக்கு வக்காலத்து வாங்கவில்லை!

ஃ

தமிழீழச் செல்வி
தி. யசோதரா
ஸ்டேசன் வீதி,
யாழ்ப்பாணம்.

கே: மட்டுநகர் பா? உ. திரு. செ. இராசதுரை தமிழர் விடுதலைக்கூட்டணியிலிருந்து விலகுவதை நீங்கள் ஆமோதிக்கிறீர்களா?

ப: தமிழர் விடுதலைக்கூட்டணியிலிருந்துயாரும் விலகுவதை நான் ஆதரிக்கவுமில்லை; அதே சமயத்தில் இனவிடுதலைக்காக செயல்படாமல் பெயருக்காக மட்டும் கூட்டணியுடன் ஒட்டிக்கொண்டுயாரும் சோம்பிக் கிடப்பதையும் நான் ஆதரிக்கவில்லை. தம் உயிரையே அர்ப்பணித்து தமிழ் இளைஞர்கள் போராடும் காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியிலுள்ளவர்கள் யாரும் வெறுமனே பொழுது போக்கிக் கொண்டிருப்பதை யாரும் சகிக்கமாட்டார்கள்.

● கேள்விகள் அனுப்ப வேண்டிய முகவரி:-

திருவாளர் குயுக்தியார்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்,

---

## கயமை ஏடுகள்

தரங்குறைந்த எழுத்தெழுதிப்
பணம் திரட்டும் நோக்கத்தால்
தாள் தொடங்குகின்றார் இங்கே!

உரங்குலைந்த உள்ளத்தார்
நரம்பிளைத்த உடலத்தார்
வெற்றுணர்வால் ஓடோடிப் போய்

குரங்கினம்போல் தாவியதை
வாங்கி அறைத்தாழடைத்துத்
தனித்துப் படித்து விடாய் தணிப்பார்!

இரங்குகின்றோம்! ஓ! ஓ! ஓ!
இளைஞர்களே! இளைஞைகளே!
வாழ்வவென் பதிதுவே தானோ?

கயமையினை எழுத்தாக்கி
கற்பிழப்பைக் கதையாக்கிக்
காமத்தைக் கடையில் விற்கும்

நயமில்லா இப்போக்கை
முள்மரத்தை—நந்தமிழர்
முளையினிலே நசுக்கல் வேண்டும்!

வயமிழக்கச் செய்கின்ற
இந்நோய்க்கு வாய்த்த நறு
மருந்தே செந்தமிழ் மருந்தாம்

கயமையினைத் தமிழெழுத்தால்
விலைபோக்கும் தமிழ்க்கெடுப்பா
னைக்கெடுப்பான் தமிழைக்காப்பான்!

—பாவலர் பெருஞ்சித்திரனார்

---

### தமிழர் விடுதலைக் கூட்டணி சங்கானை கிளை

தலைவர்: ஏ. இ. இரத்தினசாமி, உபதலைவர்: த. ஜெகதீஸ்வரன், செயலாளர்: த. இராசதுரை, உதவிச் செயலாளர்:- இ.சி.வி. திருச்செல்வம் (தீந்தமிழ் செல்வன்) பொருளாளர். இ; கனகரத்தினம், நிர்வாகசபை அங்கத்தவர்கள்:- த. கோவிந்தசாமி அ. ஞானச்சந்திரன், நா. சிவசிதம்பரம்: வீ. சிவராஜா, ஜெயபாலகிருஷ்ணன், மா. செல்வக்கண்டு, செ. கோபால், எஸ். பீ. சிவப்பிரகாசம், வி. சிவராஜா.

---

த. வி. கூ. தலைமைப் பணியக

### வாராந்தக் கருத்தரங்கு

காலம்— 20-5-78 சனிக்கிழமை. மாலை 6-00 மணி.

தலைவர்— திரு. வெ. யோகேஸ்வரன், பா உ

தலைப்பு—தமிழ் ஈழத்தின் பொருளாதாரம் 2வது உரை.

உரைநிகழ்த்துபவர்— திரு க. சச்சிதானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்மறைக் கழகத்தின் 18-வது திருக்குறள் மாநாடு-சிறப்பிதழ்

உலகப் பொதுமறை—தமிழ் மக்களின் திருமறை — வாழ்க்கை வழி காட்டி—என்றெல்லாம் புகழப்படும் திருக்குறளுக்கு புங்குடுதீவில் மாபெரும் விழா எடுத்து மாநாடு நடத்துகின்றனர் தமிழ் மறைக்கழகத்தினர். தமிழனின் வாழ்வுக்கும் வளத்துக்கும் வழிகாட்டும் திருக்குறள் தனது தாயகத்தை மீட்கப் போராடும் ஈழத்தமிழனுக்கு சரியான அரசியல் திசைகாட்டும் கருவியாக விளங்குகிறது. நெருக்கடிகளும், துன்பங்களும் தமிழன் வாழ்வை சூழ்ந்துள்ள இன்றைய நிலையில் அவற்றிலிருந்து விடுபட வழி கூறும் திருக்குறளுக்கு மாநாடு நடத்தி, தமிழ் மக்களின் அயர்ச்சியைபோக்குவதற்கு முனைந்துள்ள தமிழ் மறைக் கழகத்தினரின் சீரிய பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

திருக்குறள் மாநாட்டையொட்டி பேராசிரியர் அன்பு கணபதி அவர்களின் அருமையான கட்டுரையொன்றை இங்கு தருகிறோம்.

—ஆர்

# திருவள்ளுவர் கூறும்!

# கடமை, கண்ணியம் கட்டுப்பாடு

உலகில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் உரிமைக்காகப் போராடும் காலம் இது. உரிமைக்குப் போராடுபவர்கள் அவரவர்க்குரிய கடமைகளையும் தவருது முறைப்படிச் செய்து வரவேண்டும். உரிமையும் கடமையும் ஒன்றிற்கு ஒன்று பிரிக்க முடியாதன. உரிமை வேண்டுவார், கடமை உணரவேண்டும் கடமை செய்யாதார் உரிமை வேண்டுவதில் பொருள் இல்லை.

## கடமை

மகனை ஆளாக்கிய் உலக அவையில் பங்கு கொள்ளும் எதிலும்—முதல்வனுக இருக்கும் வகையில் வளர்ப்பது தந்தையின் கடமை, இத்தகைய வல்லமையுள்ள பிள்ளையை, நல்ல பிள்ளையைப் பெற 'எவ்வளவு நோன்பு நோற்ருனே இவன் தந்தை' என்று உலகவர்கண்டு வியக்கும் வண்ணம் நடந்து குடும்பப் பெயரைக் காப்பாற்றுதல் அப்பிள்ளையின் கடமை.

தான் பிறந்த குடும்பத்தை ஒருவன் தனக்கு உரியதாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அக் குடும்பத்தின் இன்ப துன்பங்களில் பங்குகொள்ள வேண்டும். அதனை அடக்கி ஆளுந்திறமையைத் தனதாக்கிக் கொள்ள வேண்டும். சுருக்கமாகச் சொன்னுல் குடும்பமே அவன், அவனே குடும்பம் என்ற ஈடுபாடு வெளியார்க்குத் தெரிய வேண்டும்.

நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான் பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல். (குறள் 1026)

தன் குடும்பம் -குடி -உயர ஒவ்வொரு தனி மனிதனும் உழைக்க வேண்டும். அதற்குக் காலம் கனியட்டும் என்று காத்திருத்தல் தேவை இல்லை. நான் மட்டும் இக் குடும்பத்திற்காக உழைக்க வேண்டுமா? மற்றையோர்க்குப் பொறுப்பு இல்லையா? குடும்பத்திலுள்ள மற்றையோர் மகிழ்ச்சியாகவாழ நான்மட்டும் ஏன் பாடுபட வேண்டும்? — இவ்வாறெல்லாம் அக்குடும்பத் தலைவன் எண்ணவோ சோம்பிச் செயலற்று இருக்கவோ முடியாது; கூடாது. இருந்தால் குடும்பம் நடக்காது. மாறுக நாளும் நலிந்து கெடும்.

குடிசெய்வார்க்கு இல்லை பருவம்; மடி செய்து
மானம்கருதக்கெடும்.(1028)

எனவே, 'நம் கடமை இது' என்று எண்ணி, அறிந்து, அதன் படி நடப்பவரே நல்லவர்; அவரே சான்ருண்மை—பல நல்ல குணங்களையும்—பெற்று உயர்ந்தவர். இவர்களிடத்தில் நல்ல குணங்கள் அனைத்தும் இயல்பாகவே நிரம்பியிருக்கும்; யாரையோ கேட்டுப் பெற வேண்டுவதில்லை.

கடன்என்ப நல்லவை எல்லாம்; கடன் அறிந்து
சான்ருண்மைமேற்கொள் பவர்க்கு. (901)

எனவே தன் குடியை—ஊரை பிறந்த பொன்னுட்டை உயர்த்த—எல்லா வகையிலும் ஏற்றம் பெற்றுச் சிறந்திட— உழைப்பது ஒவ்வொருவரின் கடமையாகும்.

## கண்ணியம்

பிறரைக் குறை காண்பதே மனிதனுடைய இயல்பு; தான் செய்யும் குற்றம்தனக்குத் தெரியாது. மற்றவர்களைப் பற்றிப் புறங் கூறுவதே சிலர் தொழில். இவர்களுக்குப் பிறர் செய்யும் பல நன்மைகள், உதவிகள் கண்ணுக்குத் தெரிவதில்லை; அவர்கள் தவறிச் செய்கின்ற குற்றங்களே கண்ணிற்படும். அது மட்டும் தானு? இல்லை. பிறகு என்ன? தான் செய்கின்ற குற்றங்கள் ஒன்றும் இவர்களுக்குப் புலப்படாது; புலப்பட்டதாகக் காட்டிக் கொள்ளவே மாட்டார்கள். இவர்களை நாகரிகமுடையவர்கள் —கண்ணியவான்கள் என்று உலகம் எவ்வாறு பேசும்?

ஏதிலார் குற்றம்போல் தம் குற்றம் காண்கிற்பின்
தீது உண்டோ மன்னும் உயிர்க்கு (190)—

மனிதன், தீமை செய்யப் பயப்பட வேண்டும். பழியொடுபட வரும் செயல்களை செய்யலாகாது: அவற்றைச் செய்ய அஞ்சவேண்டும். இவ்வாறு அக்கிரமம் செய்

அஞ்சுதல் கோழைத்தனம் அன்று; அஞ்சாது இருத்தலே முட்டாள் தனம். அறிவாளிகள் போற்றும் அரியநெறி இது: பழிக்கு அஞ்சுபவர்களே அறிவாளிகள்.

அஞ்சுவது அஞ்சாமை பேதமை; அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில் (428)

மனிதனுடைய செயல்கள் மட்டும் அல்லாது, பேசும் வார்த்தைகளும் அர்த்தம் உடையனவாக இருத்தல் வேண்டும். பொருள் இல்லாது வீண் பேச்சுப் பேசுபவனை உலகம் மதிக்காதது. மட்டும் அன்றி. வெறுக்கவும் செய்யும். எனவே அறிவுக்குப் பொருந்திய வார்த்தைகளைப் பேசு; அளவோடுபேசு தனக்கும் பிறர்க்கும் நன்மை உண்டாகக்கூடிய சொற்களைச் சொல்லு. இவ்வாறு பேசுபவனை — நடப்பவனை— உலகம் மதிக்கும்; மற்றையவனைப்பதர் என எண்ணி நீக்கும்.

பயன்இல்சொல் பாராட்டு வானை மகன் எனல்;
மக்கட் பதடி எனல். (196)

கண்ணியம் நிறைந்த நினைப்பு பேச்சு மட்டும் போதா. செயலிலும் அது சிறந்து நிற்க வேண்டும். கண்ணியம் என்ருல் என்ன? நாகரிகமாக— பக்குவமாக— பிறர் மனம் நோகாதவாறு— தான் கொண்டகொள்கையில் பிறழாத வகையில் நடத்தல் அன்ருே?

வாழ்க்கையில் ஒருவன் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதுடன் மட்டும் நிற்க முடியாது தன் தனி இன்ப வாழ்க்கையில் — அன்புத் துணைவியுடன் கூடி நடத்தும் அழகு நிறை வாழ்விலும் கண்ணியம் கடைப்பிடிக்க வேண்டும்; நாகரிகம்— மென்மை—போற்ற வேண்டும், சிலருக்கே அது இயலும்! முடியும் என்பதன்று சிலர் இயற்கை குணமே அது. அவரே மக்களில் சிறந்தவர்; மதிக்கத்தக்கவர்.

மலரினும் மெல்லியது காமம்! சிலர் அதன்
செவ்வி தலைப்படு வார். (1289)

## கட்டுப்பாடு

உள்ளத்தாலும் உரையாலும் செயலாலும் நம்மை பேணவேண்டும்; அவரே உலகில் உயர்ந்தவர். சிலசமயங்களில் மனமும் செயலும்கூட மாறுபடலாம், பெரும் தீங்கு விளைந்து விடாது. ஆனுல் சொல்லில் விழிப்பு வேண்டும். அறிந்து அளவோடு பேசவேண்டும். ஒன்று கிடக்க ஒன்று பேசுதலோ, சமய சந்தர்ப்பம் தெரியாது பேசிச் சிக்கலுக்குள் அகப்பட்டுக்கொண்டு தவிப்பதோ கூடாது. ஆகாதவற்றைப் பேசினுல், அவர்க்குப் பிறர் துன்பம் செய்ய வேண்டுவதில்லை! தாமே துன்பத்தைத் தமக்கெனத் தேடிக்கொண்டவர் ஆவார், இத்தனையும் சொல்லைக் காவாமையால் வருவன.

யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல் இழுக்குப்பட்டு (127)

வாழ்க்கையில் சில நெறி முறைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டியவர்களாக உள்ளோம், சமுதாய நன்மைக்காகச் சுயக் கட்டுப்பாட்டுடன் ஒவ்வொருவரும் நடந்தாகவேண்டும்."எல்லாரும் இந் நாட்டு மன்னர்" என்பது தத்துவம், நடைமுறையில் வரிசையான சில படிகள் உண்டு. ஒவ்வொரு படியாக ஏறிச்செல்ல வேண்டும். திடீரென்று உச்சப் படியில் யாரும் கால் வைத்து விட முடியாது. எல்லாப் படிகளையும் தட்டிச் சமப் படுத்துவதும் இயலக்கூடியதன்று. இது வாழ்க்கை நெறி; வாழ்க்கையில் நாம் கடைப் பிடிக்க வேண்டிய கட்டுப்பாடு.

ஆகாத காலம் இருக்கும்! காலம் கனியும் வரையில் பொறுத்திருக்கத்தான் வேண்டும், உரிய சந்தர்ப்பம் வந்ததும், சிறிதும் தாமதிக்காது, கடமையில் கருத்து வைத்துக் கண்ணியம் காத்துக் கட்டுப்பாட்டுடன் செயலாற்றி உயர வேண்டும்.

கொக்கு ஒக்க கூம்பும் பருவத்து; மற்று அதன்
குத்து ஒக்க சீர்த்த இடத்து (490)

எவ்வளவுதான் மனிதன் உயர்ந்தவனுக இருந்தாலும் பொறுமை அவனுக்கு அணிகலனுக இருத்தல் வேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு வாழ்க்கைப் படியில் ஒருவன் உயர்கின்ருனே, அவ்வளவுக் அவ்வளவு அடக்கம் உடையவனுக பணிந்த நடையும் அன்பு மொழியும் பிறரிடம் காட்டுவோனுக வாழ வேண்டும். அவனே வாழ்வில் சிறந்து உயர முடியும். அத்தகைய மக்களைக் கொண்ட சமுதாயமே உலகில் உயர்ந்ததாக—பயன் உடையதாக பாராட்டிப் போற்றப்படும்.

பேராசிரியர்
**அன்பு கணபதி**

பழந்தமிழர் கண்ட நெறிகள் இவை, கடமை தவருது கண்ணியம்—நாகரிகம்— போற்றி கட்டுப்பாடான வாழ்க்கை வாழ்ந்தவர் நம் மூதாதையர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்புதமிழர் செய்த தவத்தால் தோன்றிய வள்ளுவன் தன் சிந்தையில் வடித்து சொல்லில் தீட்டிச் சென்ற நூல் காட்டும் நெறியும் இதுவே.

பெருக்கத்து வேண்டும் பணிதல்! சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. (936)

---

## தமிழ் ஈழத்தில் தொழில்வளம்

மோட்டார் உதிரிப்பாகங்கள்
எவை எவை உற்பத்திசெய்யலாம்?
தமிழர் பொருளாதார இயக்கத்துக்கு
சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைகள்

### (I) பான்பெல்ட்கள் (FANBELTS)

இதற்கு வேண்டிய மூலப் பொருட்கள் இறப்பர், நைலோன் நார், இரசாயணப் பொருட்கள் ஆகியவை. நாம் இதற்கென்றே ஒரு சிறு தொழிற்சாலை ஆரம்பித்தாலும் எமது பிரதேசங்களின் சுய தேவையைக் கூட பூர்த்தி செய்ய முடியாத அளவுக்கு இதன் தேவை அதிகமாகும். இறக்குமதியான பான் பொருட்களின் விலை கடந்த ஐந்து வருடத்தில் ஐந்து மடங்கிற்கு மேலாக கூடியிருக்கிறது. 1972இல் ஒரு A40 பான் பெல்டின் விலை ரூபா 7/= ஆகும். ஆனுல் தற்போது அதன் விலை ரூபா 40/- வரையில் ஆகும். புதிதாக இறக்குமதியாகும் போது செலவாணி மதிப்பிறக்கத்தால் இன்னும் விலை உயர்வு ஏற்படும். இந்த சூழ் நிலையில் சுமாரான தரத்தில் இவற்றைஉற்பத்தியாக்கமுடிந்தால், குறைந்த விலையில் எமது இரண்டு மாவட்டங்களிலும் தாரளமாகச் சந்தைப்படுத்தலாம். பான்பெல்ட்களின் உற்பத்தி சிங்களப் பகுதிகளில் குடிசைக் கைத்தொழிலாக நடைபெறுகிறது. ஆனுல் அவர்கள் நைலோன் நார்களுக்குப் பதிலாக சணல் கயிற்றையும், இரப்பரைப் பதப்படுத்துவதற்காக் இரசாயணப் பொருட்கள் பாவிக்காத படியினுலும் தரம் (Quality) என்பது அறவே கிடையாது. தரம் குன்றி இருப்பதனுல் மக்கள் வெளிநாட்டு பெல்ட்களை நாடுகிருர்கள். ஆகவே இப் பொருளின் உற்பத்திக்கு நல்ல எதிர்காலம் இருக்கும் என்பதில் ஐயமே இல்லை.

—நடராஜா சுப்பிரமணியம்.

## எண்ணம்

# வன்முறை

இலங்கையில் 'வன்முறை' பற்றி இப்போது சில நாட்களாக அதிகமாகப் பேசப்படுகிறது. அண்மையில் இரகசியப்பொலிசார் நால்வர் முருங்கனில் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தின் பின்னர், 'வன்முறை' பற்றிய வாதப் பிரதி வாதங்கள் நாலாபுறத்திலிருந்தும் எழுந்துள்ளது.

வன்முறை இயக்கங்களை தடைசெய்யவும் அம்மாதிரியான இடக்கங்களை ஆதரிப்போரை சிறைக்கனுப்பவும், அவர்களது சொத்துக்களை பறிமுதல் செய்யவும், தடுப்புக்காவலில் வைக்கவும் வழிவகுக்கும் அவசர சட்டங்களை தேசிய அரசுப்பேரவையில் இந்தவாரம் அரசாங்கம் கொண்டு வந்துள்ளது.

சுதந்திரமும், சமத்துவமும், சகோதரத்துவமும் உண்மையாககே நிலவும் நாட்டில்— மனித அடிப்படை உரிமைகள் உண்மையாகவே பின்பற்றப்படும் ஒரு நாட்டில்— அமைதியையும், சமாதானத்தையும் விரும்புகிற மக்கள் ஒரு போதுமே வன்முறையை நாட மாட்டார்கள்; வன்முறையை விரும்பவும் மாட்டார்கள். ஆனல் பொறுமை எல்லைமீறுகிற அளவுக்கு கொடிய அடக்குமுறையும், அக்கிரமும் தலைதூக்கும்போது தான், கட்டவிழ்த்து விடப்படும்போதுதான்—சில சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அமைதியை இழநதுவிடுகின்றனர்.

வன்முறை என்பது எங்கிருந்து வந்தாலும்—அது பொது மக்களின் தரப்பிலிருந்து வந்தாலும் சரி—அல்லது பொலிஸ், ஆயுதப் படைகளின் தரப்பிலிருந்து வந்தாலும் சரி—அமைதியிலும் சமாதானத்திலும் நம்பிக்கையுள்ளவர்கள் நிச்சயம் மகிழ்ச்சியடைய மாட்டார்கள்! வன்முறை தான் வன்முறையைத் தூண்டி விடுகிறதே தவிர, வேறு யாரும் வன்முறையைத் தூண்டி விடவேண்டியதேவையோ அவசியமோ இல்லை.

1948க்குப் பின்னர்— கடந்த 30 ஆண்டுகால இலங்கையின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால்— இந்த நாட்டில் சிங்கள இன வெறியர்களின் வன்முறைக்கும், பொலிஸ், ஆயுதப்படைகளின் வன்முறைக்கும் தொடர்ச்சியாக பலியாகி வந்திருப்பவர்கள் தமிழ் பேசும் மக்களே என்பதை வரலாறு விரித்துரைக்கின்றது.

1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் என்ற அநீதியான சட்டத்தை எதிர்த்து அஹிம்சை முறையில் சத்தியாக்கிரகம் செய்த தமிழ்த் தலைவர்கள் சிங்கள வன்முறையாளர்களால் படுமோசமாகத்தாக்கப்பட்டனர். அதே ஆண்டு அம்பாறையிலும், மற்றும் இடங்களிலும் சிங்கள இன வெறியர்களாலும்; ஆயுதப்படைகளாலும் தமிழர்கள் கொடுமைப்படுத்தப்பட்டனர்.

1958ம் ஆண்டு இடம் பெற்ற சிங்கள இனவெறியர்களின் பயங்கரத்தாக்குதலும், அதனல் தமிழர்களின் இரத்தத்தால் இந்நாட்டு மண் நனைந்து சிவப்பேறிப் போனதும் சரித்திர உண்மை.

1961ம் ஆண்டு சாத்விகமான முறையில் அமைதியான சட்டமறுப்பிலீடுபட்ட தமிழ் மக்கள் மீது ஆயுதப் படையினரால் அறிவிப்பு ஏதுமின்றியே வன்முறைப் பிரயோகம் செய்யப்பட்டது.

1974ம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது யாழ்ப்பாணத்தில் பொலிசாரின் வன்முறையின் விளைவால் ஒன்பது தமிழர்களின் உயிர் பறிக்கப்பட்டது!

அதே போல 1976ம் ஆண்டு புத்தளம் பெரிய பள்ளிவாசலில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த ஏழு முஸ்லிம்கள் பொலிஸ் வன்முறையால் உயிரிழந்தனர்!

இவை தவிர, யாழ் செம்மணியில் பரராசா, மலையகத்தில் இலட்சுமணன் — இப்படி பலர் அவ்வப்போது பொலிஸ் வன்முறையினுல் உயிரிழந்துள்ளனர்!

1970 முதல், 1976 வரை முந்திய ஆட்சிக்காலத்தில் எதுவித குற்றமுமற்ற அப்பாவித்தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு மனிதாபிமானமற்ற குரூரமான வன்முறைகளுக்குட்படுத்தப்பட்டனர்.

எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல்—1977 ஆகஸ்ட் கலவரத்தின்போது, சிங்கள காடையர்களும், பொலிசாருமாகச்சேர்ந்து தமிழர்கள் மீது கொடூரமான வன்முறையை ஏவிவிட்டு, தமிழர்களை கொன்று குவித்து, தமிழர் சொத்துக்களைச் சூறையாடி அராஜகம் விளைத்தனர். அவசரகாலச்சட்டத்தைப் பிரகடனப் படுத்தி தமிழ் மக்களை காப்பாற்றுவதற்கு அரசாங்கம் அப்போது மறுத்து விட்டதுமாத்திரமல்ல—சண்டையா சமாதானமா? என்று வீராவேசம் காட்டியது.

ஆக—இவற்றிலிருந்து தெரிவது என்ன?

இத்தீவில் வன்முறைக்கு வித்திட்டவர்கள் — வன்முறையை விதைத்தவர்கள் — வன்முறையை சீராட்டி பாலூட்டி வளர்த்தவர்கள்—தமிழர்கள் அல்ல! சிங்களவர்களும், பொலிஸ், ஆயுதப்படையினருமே என்பது புரிகிறதல்லவா?

# "உலகத் தமிழர்கள் ஒன்றுபட்டு ஈழத்தமிழுக்காக குரல் கொடுப்பர்!"

## தென்மொழி பெருஞ்சித்திரனர் செய்தி!

ஓர் இனத்தின் உட்கூறுகளைப் பிரித்தெடுக்கும் பொழுதோ, சிதைக்கும் பொழுதோ அந்த இனமே அழிந்து போகிறது. ஓர் இனத்தின் உட்கூறுகள் என்பன அதன் மொழி, பண்பாடு, நாகரிகம், இலக்கியம், அரசியல் சார்பு நிலைகள், பொருளியல் வலிமை, குமுகாயப்படிவுநிலை, அவைவழங்கும் நிலப்பரப்பு ஆகியவை ஆகும்.

இவற்றுள் எந்த ஒன்று சிதைவுற்ருலும் அல்லது சிதைக்கப்பெற்ருலும், அச்சிதைவின் தன்மையைப் பொறுத்து, அவ்வினம் சிதைந்தோ, படிப்படியாகவோ கட்டாயம் அழிவுறும் என்பது உறுதி; மிக உறுதி!

இனி, இவ்வுண்மைக்கு மறுதலையாக, இயற்கையாகவோ செயற்கையாகவோ ஓர் இனத்திற்கு ஏற்பட்டு வரும் இச்சிதைவு நிலைகளை எந்த ஓர் இனம், தெரிந்து, தடுத்து நிறுத்திக் கொள்கின்றதோ, அந்த இனம் அந்த அழிவு நிலையினின்று தன்னைக் காத்துக் கொள்கிறது. இத்தற்காப்பு நிலை. எந்த அளவுக்கு வலிமையும் விரைவும் கொண்டு விளங்குகின்றதோ. அந்த அளவுக்கு அதன் நிலைப்பாடும் உறுதி மிக உறுதி என்க.

இவ்வுலக வியற்கை மெய்மத்தின் அடிப்படையில் இலங்கைத் தமிழரின் மேன்மைக்கு அடிகோலத் தவறுவார்களாயின், உலகெங்கணும் உள்ள தமிழர்களை ஒன்று படுத்திப் போராட வைக்கும் முயற்சியாக அஃது அமையும் என்று எச்சரிக்கையுடன் வலியுறுத்திக் கூறுகிறேம். அத்தகையதோர் எழுச்சியை இவ்வுலகம் விரைவில் காணத்தான் போகிறது. தமிழர் தங்களுக்கென்று ஒரு தனிநாட்டை அமைத்துக் கொள்ளத்தான் போகின்றனர் என்று உறுதி கூறிப் பாவேந்தரின்.

சிங்களஞ்சேர் தென்னட்டு
மக்கள்
தீராதி தீரரென்று ஊதூது
சங்கே!
பொங்கு தமிழர்க்கு
இன்னல் விளைத்தால்
சங்காரம் நிசமெனச்
சங்கே முழங்கு

இவ்வாறு திருக்குறள் மாநாட்டுக்கென ஈழம் வந்துள்ள பெருஞ்சித்திரனர் தமது தென்மொழி இதழில் எழுதியுள்ளார்.

# அடையாள அணிவகுப்பு நடைபெறவில்லை!

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து சி.ஐ.டி.யினரால் கைது செய்யப்பட்ட பரமானந்தன் கடந்த வெள்ளிக்கிழமை (13.5.78) மன்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டாராயினும் அன்று அவர் மீதான அடையாள அணிவகுப்பு நடைபெறவில்லை. பரமானந்தன் 26.5.78 வரை விளக்கமறியலில் மன்னர் நீதவானல் வைக்கப்பட்டார்.

அடையாள அணிவகுப்பு நடைபெற்றதாகவும் அவ்வடையாள அணிவகுப்பில் பரமானந்தன் அடையாளம் காணப்படவில்லையென்றும் 17 5.78 சுதந்திரனில் இடம் பெற்றிருந்த செய்தி தவருனதாகும். -ஆர்

சன்சோனி ஆணைக்குழு
பதிவேட்டின்
தமிழ் ஆக்கத் தொடர்
**ஆவணி அமளி I**
விலை ரூபா 3.00
**ஆவணி அமளி II**
விலை 4.50
கொழும்பில் கிடைக்குமிடம்
இராசேஸ்வரி பவான்
கோட்டை.

—5-ம் பக்கத் தொடர்

திருப்பீர்கள். நான்போனது கூட ஏதோ ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காகத்தான் என்றும் நீங்கள் கூறியிருப்பீர்கள்.

"நாங்கள் இப்போது அறிக்கை விடுத்தால், அறிக்கையின் மூலம் நாம் எம்மைப்பாதுகாத்துக் கொள்ள முயற்சிப்பதாக நீங்கள் கூறக்கூடும், பொலிசார் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் பற்றி இந்த நாட்டிலுள்ள வேறு எந்த ஒரு அரசியற்கட்சியும் அறிக்கைவிடவில்லை. சபாநாயார் அவர்களே, தமிழர் விடுதலைக்கூட்டணி மட்டும் ஏன் அறிக்கை வெளியிட வேண்டும் என்று உங்களைக் கேட்கிறேன்.

குறித்த பொலிசாரை சுட்டவர்கள் தமிழ் இளைஞர்கள் தான் என்பதற்கு திட்டவட்டமான ஆதாரம் உண்டா? உங்களால் இதை குறிப்பிட்டுக்கூற முடியுமா? நான் இதை அறைகூவலாகவே விடுகிறேன். உங்களிடம் அதற்கு ஆதாரம் கிடையாது. ஏதோ ஒரு பத்திரிகையில் ஓர் அறிக்கை வெளிவந்தது என்பதற்காக—(இடையீடுகள்) நீங்கள் அதைக்கண்டித்தீர்களா? எப்பொழுதுகண்டித்தீர்கள்? ஏதோ ஓர் இயக்கம் இவற்றுக்கு பொறுப்பாளிகள் என்று கூறியிருப்பதாக சொல்லப்படும் ஒரு செய்தியை ஒரு புதினப்பத்திரிகை பிரசுரித்திருந்தது என்பதற்காக தன்னைத் தானே புலி இயக்கம் என்று அழைத்துக்கொள்ளும் ஓர் இயக்கம் அனுப்பியதாக சொல்லப்படும் கையெழுத்திடப்படாத ஒரு அறிக்கைக்காக...நாங்கள் ஏன்—(இடையீடுகள்)

"நான் எதிர்க்கட்சித் தலைவர். ஐக்கிய தேசியக்கட்சி அறிக்கை வெளியிட்டதா? இதைக்கண்டித்து சிறீலங்கா சுதந்திரக்கட்சி அறிக்கை வெளியிட்டதா? ஏன் தமிழர் விடுதலைக் கூட்டணி மாத்திரம் அறிக்கை விட வேண்டும்? (இடையீடுகள்) நான் மரியாதைக்குரிய உறுப்பினருக்காக அனுதாபப்படுகிறேன். அவருக்குள்ள ஆற்றல் அவ்வளவு தான்!

எத்தனையோ கொலைகள் நடைபெறத்தான் செய்கின்றன. அவைபற்றி அறிக்கை விட்டுக்கொண்டிருப்பது அரசியற் கட்சிகளின் கடமையல்ல,

ஏதாவது ஒரு கட்டத்தில், யாராவது தனிநபரோ அல்லது ஒரு குழுவோதான் இதற்கு பொறுப்பு என்று நிலை நாட்டப்படுமானல், அவர்களை சட்டத்தின் பிடியில் கொண்டுவந்து நீதிமன்றத்தின் முன்நிறுத்தி குற்றவாளிகளாக காணப்பட்டால் அவர்களை தண்டிக்கவேண்டியது அதிகாரிகளின் கடமை. சட்டம் எதிர்பார்ப்பது அதைத்தான்!

"உங்கள் அச்சுறுத்தலும், (பிளாக்மெயில்) மிரட்டலும் எம்மிடம் பலிக்காது. இதைத் தான் நான் இந்தப் பேரவையிலுள்ள உறுப்பினர்களுக்கும், நாட்டுக்கும் கூறிவைக்கவிரும்புகிறேன்.'.

இளைஞர்களில் ஒரு பிரிவினரிடையே ஆழமான விரக்தியும், வெறுப்பும் வளர்ந்துள்ளது என்பதை மறுக்க முடியாது. அந்த வெறுப்புகளை, விரக்தியை இல்லாமற் செய்வது எமது பொறுப்பு ஆகும். நாங்கள் எங்கள் இளைஞர்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவே முழு முயற்சி செய்கிறேம் ஆனல் மன்னர் குற்றங்களுக்கு யார் காரணம் என்பது எமக்குத் தெரியாது.

கௌரவ உறுப்பினர்களுக்கு ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன்—அவாகளில் சிலருக்கு சட்டநடைமுறைகளும், குற்றவாளிகளை கண்டு பிடிக்கும் சரியான வழிமுறைகளும் தெரிந்திருக்க நியாயமில்லை— ஆட்களைப் பற்றி அவசரப்பட்டு தீர்மானித்துவிடக்கூடாது.

ஏதாவது ஒரு கட்டத்தில் எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த யாராவது, ஓர் உறுப்பினர் மேலாவது, அல்லது இயக்கத்தின் மீதாவது இவற்றுக்கான பொறுப்பு சுமத்தப்படுமானல்- அதன் விளைவை எதிர்கொள்ளவும், அனுபவிக்கவும் நாம் தயாராக இருக்கிறேம்.

ஆனல் நான் மிகவும் உள்ளத் தூய்மையுடனும், மிகவும் பொறுப்புடனும் இங்கு சொல்லக்கூடியது என்னவென்றல்— காலஞ்சென்ற திரு. செல்வநாயகம் அவர்களால் கட்டியெழுப்பப்பட்ட எமது கட்சி, காந்திய இலட்சியங்களை பின்பற்றுகிற ஒரு கட்சியாகும். அதனல் தான் திரு. செல்வநாயகம் அவர்களின் நினைவு நிகழ்ச்சிக்கு இந்தியாவிலிருந்து காந்தி சீடரான திரு. ஆர்.ஆர். திவாகரை அழைத்து எமது மக்களுக்கு, பொறுமை இழந்த நிலையிலுள்ள எமது இளைஞர்களுக்கு, பிரச்சினைகளை காந்திய வழியில் தீர்ப்பது எப்படி என்பதையிட்டு போதனை நடத்தினேம். இவ்வளவுமே இப்போதைக்கு நான் கூறவிரும்புகிறேன்.

## இலவசம்

யோகாசனப் பயிற்சியைக் கற்பிக்கும் பாடசாலைகளுக்கு விளக்கப்படங்களுடன் கூடிய புத்தகத்தையும், யோகாசனப்படங்களையும் பாடசாலை அதிதாட்சிக் கடிதம் அனுப்பி இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ் இளைஞர்களில் ஒரு பிரிவினர் மத்தியில் புரட்சி எண்ணம் தலைதூக்கியிருப்பது உண்மை"

—1-ம் பக்கத்தொடர்

பாரா? சரியான சொற்களை நாம் பரிசீலித்துப்பார்த்து இந்தஒழுங்குப்பிரச்சினையை தீர்த்து வைப்போம். திட்டவட்டமான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தால், அது வாபஸ் பெறப்படும் என்பதற்கு நான் உத்தரவாதம் அளிக்கிறேன். மறைமுகமாக எதையும் கூறுவதற்கு அவருக்கு உரிமையுண்டு, அது வேறு விடயம்.

எம். சிவசிதம்பரம்: "அவ்வாறு மறைமுகமாகக் குறிப்பிடுவதற்குக் கூட அவருக்கு உரிமையில்லை என்பதை மரியாதையுடன் உங்களுக்கு தெரியப்படுத்துகிறேன்.

சபாநாயகர்:- அது பற்றி பின்பு பார்ப்போம்; இது ஒரு முக்கிய ஒழுங்குப்பிரச்சினை என்பதால் அதற்கு முடிவுகாண்போம். சபை நிருபர் தனது நடவடிக்கைக் குறிப்புக்களை இப்போது கொண்டுவருவார்... (குறிப்பை வாசிக்கிறார்) "பொத்துவில் இரண்டாவது பிரதிநிதி கட்சிமாறியதைக் குறிப்பிட்ட எதிர்க்கட்சித்தலைவர், அவரை ஒரு துரோகியென்று அழைத்தார்."

எம். சிவசிதம்பரம்:- ஆனால் அவர் துரோகியென்று கூறியதாக முதலில் அவர் குறிப்பிட்டார்.

சபாநாயகர்:- அவரைத் துரோகியென்று அழைத்தார்— ஆம், தொடர்ந்து குறிப்பை வாசிப்போம்; "அப்படியானால், எதிர்க்கட்சித்தலைவருக்கு இந்தச் சம்பவங்களுடன் தொடர்பு இருக்கிறது."

திரு. அமிர்தலிங்கம்:- அதே தான், அதனால் தான் நான் இங்கு ஒழுங்குப்பிரச்சினை எழுப்பினேன்.

சபாநாயகர்: நான் அதை ஏற்றுக்கொள்ளுகிறேன்.

(இதன்பின்னர் சபாநாயகரின் உத்தரவின்பேரில் வியாலுவ உறுப்பினர் திரு. வீரவன்னி மேற்குறிப்பிட்ட கூற்றை வாபஸ் பெற்றுக் கொள்ளுகிறார்)

திரு அமிர்தலிங்கம்: சபாநாயகர் அவர்களே,"பாராளுமன்ற நடை முறைகள் இப்போது தான் முதல் தடவையாக இங்கு மீறப்படுவதை பார்க்கிறோம்,"

ஓர்உறுப்பினர்: நாட்டைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

எம். சிவசிதம்பரம்: எதையும் விளங்கக் கூடியதாக கூறுங்கள்!

திரு. அமிர்தலிங்கம்: பாராளுமன்றத்தின் சரித்திரத்திலேயே இப்போது தான் முதன் முதலாக எதிர்க்கட்சித் தலைவர் ஒருவரிடம் கேள்வி கேட்கப்படுகிறது. (இடையீடுகள்)

சபாநாயகர்: அமைதி, அமைதி... நான் அந்தப் பிரச்சினைக்கு வருகிறேன். பரபரப்பு அடையாதீர்கள்!

திரு. அமிர்தலிங்கம்: அறிக்கையொன்று வெளியிடும்படி இங்கு எம்மிடம் கோரப்பட்டது. இந்தச் சபையிலுள்ள ஓர் உறுப்பினருக்கு, இச் சபையிலுள்ள 'மற்றோர் உறுப்பினரிடம் எவ்வித அறிக்கையும் வெளியிடும்படி கேட்பதற்கு உரிமை இருப்பதாக நான் நினைக்கவில்லை.

சபாநாயகர்: இல்லை, அவ்வாறு செய்யுமாறு உங்களிடம் கேட்கப்படவில்லை!

ஓர் உறுப்பினர்: தலைவர் என்ற முறையில்...!

திரு. அமிர்தலிங்கம்: சபாநாயகர் அவர்களே! உருப்படியாக எதையும் சொல்ல முடியாதவர்களுக்கு சத்தமிடத்தான் தெரியும்என்பதை நாம் அறிவோம். இப்படிச் சத்தம் போடுவார்கள் தமது தலைக்குள் எதுவுமே இல்லை என்பதைத்தான் தமது செய்கை மூலம் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார்கள். இங்குள்ள எனதுமரியாதைக்குரிய நண்பர்கள் எவ்வளவு தான் சத்தமிட்டாலும் நான் அச்சமோ, பீதியோ, கலவரமோ துளிகூட அடையப் போவதில்லை ஆனால் நான் ஒன்றே ஒன்றைத்தான் திட்டவட்டமாக இங்கு கூறி வைக்க விரும்புகிறேன்

ஓர் உறுப்பினர்: நீங்கள் புலிகளுக்குப் பயப்படுகிறீர்கள்!

திரு. அமிர்தலிங்கம்: புலிகளோ, சிங்கங்களோ, சிறுத்தைகளோ, யானைகளோ, நரிகளோ அவை பற்றி எமக்குத் தெரியாது. அந்த மிருகங்கள் காடுகளிலேதான் வாழும். காட்டிலேயே அவை இருக்கட்டும் என்று மரியாதைக்குரிய நண்பர்கள் காட்டுக்குச் சென்று அவற்றைத் தேடிப் பார்க்கட்டும்.

## 'கொடுத்த வாக்கை மீறுகிறவர் துரோகியன்றி வேறு என்ன?'

ஓர் உறுப்பினர்:- நீங்களே அவர்களுக்கு பயிற்சி அளித்தீர்கள்!

அமிர்தலிங்கம்:- சபாநாயகர் அவர்களே, எனது கட்சிக்கு திட்டவட்டமான சத்திய வாக்குக்கொடுத்து, தேர்தல் முடிந்து சிலகிழமைகளுக்கிடையில் அந்த சத்தியவாக்குக்கு முரணாக அரசாங்கப்பக்கத்தில் சேர்ந்து கொண்ட பொத்துவில் இரண்டாவது பிரதிநிதியை (திரு. கனகரத்தினம்) நான் 'துரோகி' என்று அழைத்ததாக ஓர் உறுப்பினர் இங்கு குறிப்பிட்டார். நிச்சயமாக நான் அவ்வாறே அவரை அழைத்தேன். இப்போதும் அப்படியேதான் அழைக்கிறேன். வாக்குறுதியை கௌரவிக்கும் எவரும், வாக்குறுதியை மீறுவோரை அவ்வாறுதான் அழைப்பார்கள். ஆனால் சபாநாயகர் அவர்களே, நான் அவரைத் துரோகியென்று அழைத்ததையும், பின்னர் சில வாரங்கள் கழித்து யாரோ அவரை கொலை செய்ய முயன்றதையும் இணைத்துப்பேசுவது முரண்பட்டது, முறையற்றது, என்ற காரணத்தினாலேதான் நான் இங்கு ஒழுங்குப்பிரச்சினையொன்றை எழுப்பினேன். தர்க்க சாத்திரம் படித்தவர்களுக்கு இது நன்கு தெரியும்.

"பொத்துவில் இரண்டாவது பா. உ. திரு. கனகரத்தினம் துரதிருஷ்டவசமாகச் சுடப்பட்டதைக் கேள்வியுற்று பதறித்துடித்து அவரை நானும், எனது சகாக்களும் மருத்துவமனைக்கு சென்று பார்த்ததை பொத்துவில் பா. உ. திரு. கனகரத்தினமே அறிவார்; (இடையீடுகள்)

"சபாநாயகர் அவர்களே, பொத்துவில் இரண்டாவது பிரதிநிதியின் செயலை மிகவும் உக்கிரமாகக் கண்டித்தவர்களில் ஒருவர் அவரது சொந்த மகன் என்பதும், அவர் சில இயக்கங்களுடன் தொடர்பு கொண்டிருந்தார் என்ற காரணத்தால் இன்று விளக்கமறியலில் இருப்பதும் உங்களுக்குத்தெரியுமா? நானோ, அல்லது எனது கட்சியிலுள்ள வேறு எவருமோ தான் திரு. கனகரத்தினத்தின் மகனை இவ்வாறு தூண்டிவிட்டோம் என்று இச்சபையிலுள்ள உறுப்பினர்கள் கூறமுடியுமா?

இளைஞர்கள் தங்கள் சொந்தவழியில் எதிர்நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றனர். இதற்கான பழியை எந்தக்கட்சியிலும் போடாமல் இருப்போமாக. இளைஞர்கள் இந்த நாட்டில் மட்டுமன்றி உலகின் பல பகுதிகளிலும் புரட்சியில் இறங்கியிருக்கின்றனர்; 1971ம் ஆண்டு இளைஞர்களின் புரட்சி நாட்டில் தலைவிரித்தாடியதை கண்டோம். இங்கு இளைஞர்கள் தமக்கு எதிராக புரட்சியிலீடுபட்டதாக கூறினார்கள். அதே போல, தமிழ்இளைஞர்களில் ஒரு பிரிவினர் புரட்சியிலீடுபட்டிருக்கின்றனர் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை!

திரு. மெரில் காரியவாசம்: நீங்கள் தான் இளைஞர்களைத் தூண்டிவிட்டீர்கள்!

திரு. அமிர்தலிங்கம்: அப்படியானால், 1971ம் ஆண்டு புரட்சிக்கு நீங்கள் தான் இளைஞர்களைத் தூண்டி விட்டீர்களா?

மெரில் காரியவாசம்: நீங்கள் உண்டாக்கி விட்டதை உங்களால் கட்டுப்படுத்த முடியவில்லை!

அமிர்தலிங்கம்- 1971 ஆம் ஆண்டு புரட்சியிலீடுபட்ட இளைஞர்களை நீங்கள் விடுதலை செய்தீர்கள்! அதை நீங்கள் மறந்து விட வேண்டாம்; நீங்கள் தூண்டிவிட்டகாரணத்தாலேதான் அவர்களை நீங்கள் பின்னர் விடுதலை செய்தீர்கள் என்று நாம் கூறினால் அது சரியாகுமா? ஆனால் நாம் அ படிக் கூறவில்லை!

உறுப்பினர்கள்: அதை வாபஸ் பெறுங்கள்!

அமிர்தலிங்கம்: நான் சொன்னது உங்களுக்குப் புரியவில்லை "நாம் அவ்வாறு கூறினால் சரியா...?" என்றுதான் கேட்டேன் நான் அவ்வாறு கூறவில்லை. 1971ம் ஆண்டு புரட்சியிலீடுபட்ட இளைஞர்களை நீங்கள் விடுதலை செய்துள்ளீர்கள். ஆயுதங்களை கையிலேந்தி, பொலிசாருக்கு எதிராகப்போராடி ஏராளமான பொலிசாரை கொன்றுகுவித்து, பொலிஸ் நிலையங்களைத்தாக்கிய இளைஞர்களையெல்லாம் விடுதலை செய்து விட்டீர்கள். நாம் உங்கள் நடவடிக்கையை ஆதரித்தோம். குற்றவியல் நீதி மன்றச்சட்டத்தை திரும்பப்பெறும் உங்கள் செயலை ஆதரித்தோம். முறையான விசாரணையின்றி சிறைக்கு அனுப்பப்பட்டிருந்த அந்த இளைஞர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி துடைக்கப்படவேண்டுமென்பதால், நாம் உங்கள் செயலை ஆதரித்தோம்.

அதேபோன்று, விரக்தியின் விளிம்புக்கு சென்றுவிட்ட தமிழ் இளைஞர்களில் ஒரு பகுதியினர், எங்கள் கட்டுப்பாடுக்குள்ளிருந்து விலகி, புரட்சிப்பாதையில் செல்லுகின்ற ஒரு நிலை இன்று தோன்றியிருக்கிறதென்பதில்கிஞ்சிற்றும் ஐயம் இல்லை!

மெரில் காரியவாசம்; ஏன் நீங்கள் அவர்களைக்கண்டிக்கவில்லை?

அமிர்தலிங்கம்: சபாநாயகர் அவர்களே, இந்நாட்டில் பல கொலைகள் நடந்த வண்ணமேயிருக்கின்றன. இந்தக் கொலைகளைக்கண்டித்து நாட்டிலுள்ள ஒவ்வோர் அரசியற் கட்சியும் அறிக்கை விட்டுக்கொண்டா இருக்கின்றன? இதன் அர்த்தம் தான் என்ன? நான் ஓர் அறிக்கையை விட்டுவிட்டு, பொத்துவில் இரண்டாவது பா. உ. மருத்துவ மனையிலிருந்த நேரத்தில் அவரைப் பார்க்கப் போகாமலிருந்திருந்தால், அவரைப் பார்ப்பதில் எனக்கு அக்கறையில்லையென்று கூறியிருந்

—4-ம் பக்கம் பார்க்க

## வன்முறை...

—8-ம் பக்கத் தொடர்

ந்தவர்களையும் இது சம்பந்தமான நடவடிக்கைகளில் ஈடுபடுவோரையும் தடுப்புக்காவலில் வைப்பதற்கும் நீதி அமைச்சுக்கு உரிமையுண்டு; மூன்றுமாதத்திலிருந்து ஓராண்டுவரை இவ்வாறு தடுப்புக்காவலில் வைக்கவும் புதிய சட்டம் இடமளிக்கிறது.


நண்பர்கள் தேவையா



தோழர் - தோழியர்களின் விலாசங்களும், படங்களுடன் நட்புறவு விபரங்களுமடங்கிய தொகுப்புப் பிரதியை தபாலில் பெற்றுக் கொள்ள விண்ணப்பியுங்கள்.

The Penpals Leader,
Chandrothaya International
Borella, Golombo-8,



பாவியுங்கள்




றோயல் நீலத்தினைத் தயாரித்து விற்பனை செய்யும் சிவா இன்டஸ்ரீஸாரின் மற்றுமோர் தயாரிப்பு

றோயல் ஜெலி கிறிஸ்டல்

மற்றும் ஏனைய தயாரிப்புகள்

றோயல் பேக்கிங்பவுடர்
றோயல் கஸ்டட் பவுடர்
றோயல் கோண் பிளவர்
றோயல் பிஸ் மக்ஸ்
றோயல் நீலம்

தயாரித்து விற்பனை செய்வோர்

சிவா இன்டஸ்றீஸ்

112 1/3 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்கு உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்க தயாராவீர்"

## அரசாங்க எழுதுவினைஞர் சங்க யாழ் கிளை அறைகூவல்

வரலாற்று ரீதியாக இரண்டு தேசிய இனங்களையும் இரண்டு நாடுகளையும் கொண்ட இத்தீவில் 300 வருடகால காலனித்துவ ஆட்சிக்குப் பின் கடந்த 30 வருடகாலமாக தமிழ்தேசிய இனம் சிங்கள தேசிய இனத்தால் படிப்படியாக அடக்கி ஒடுக்கப்பட்டு, சுரண்டப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு. ஆளப்பட்டு வந்துள்ளது. போர்த்துக்கேயர் ஒல்லாந்தர்,ஆங்கிலேயர் ஆகிய காலனித்துவ ஆட்சியாளர்கள்கூட செய்யத்துணியாத அளவுக்கு தமிழ் தேசிய இனத்தை இத்தீவில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத்தாலும் வேறு பல வழிகளாலும் சிங்கள தேசிய இனத்துடன் சங்கமமாக்கி இன ஒழிப்பு செய்வதற்கு மாறி மாறி பதவிக்கு வரும் சிங்கள அரசுகள் முயன்று கொண்டிருக்கின்றன.

"இந்நிலையில், சிங்கள அரசின் கீழ் பணிபுரியும் தமிழ் ஊழியர்கள் தங்கள் உரிமைகள் பற்றியோ சலுகைகள் பற்றியோ பேசுவதிலும் வேண்டுவதிலும் எதுவித பயனும் இல்லை. சிங்கள தேசிய இனம் தமிழ் தேசிய இனத்தை ஆழும்வரைக்கும் தமிழ் தேசிய இனத்துக்கு எதுவித பாதுகாப்பும் இல்லை. கடந்த 1977ம் ஆண்டு ஆகஸ்டில் நடந்த தமிழ் இனச் சங்காரம் இதைத் தான் உறுதிப்படுத்துகிறது."

"எனவே, சிங்கள அரசின் கீழ் பணிபுரியும் ஒவ்வொரு தமிழ் ஊழியனும் தன்பதவி உயர்வு, இடமாற்றம், சம்பள உயர்வு எனும் அற்ப சலுகைக்காக மட்டும் சுய நலத்தின் உருவமாக வாழாமல் தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்காக தன் உடல், பொருள், உயிர் எதையும் இழப்பதற்கு தயாரான ஒரு பொதுநலச்சின்னமாக இனி மேலாவது இயங்கி வர வேண்டுமென்று கோரப்படுகிறது."

இவ்வாறு கோரும் தீர்மானம் அரசாங்க எழுதுவினைஞர் சங்க யாழ் கிளையின் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

பின்வருவோர் யாழ் கிளையின் நடப்பாண்டு நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு: த. நமசிவாயம், உபதலைவர்கள்: திருவாளர்கள்: சி. சண்முகலிங்கம், ச. கோபாலசிங்கம், செயலாளர்: திரு செ. மெட்ருஸ்மயில். துணைச் செயலாளர்: திரு. ந. சிவசீலன், பொருளாளர்: திரு. செ. இராமகிருஷ்ணன். செயற்குழு உறுப்பினர்கள்: கு. ந. இராசநாயகம், நா. நித்தியானந்தன், ஐ. சண்முகலிங்கம், ம. பரராஜசேகரம், நா; தில்லை நடராசா, இ. கிருஷ்ணபிள்ளை, வீ. எஸ். மகாலிங்கம், இ. நடராசா, அ. வேதநாயகம் ,நா. தனபாலசிங்கம்.

இக்கூட்டத்தில் அ. எ. வி. சங்க தலைமைப்பணிமனையில் இருந்து திரு. இ. சதாசிவம்,திரு. ந.சிவரஞ்சன் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

---

## நீதி முரசு 77 வெளியீட்டுவிழா

இலங்கைச் சட்டக் கல்லூரித் தமிழ் மன்றத்தின் வருடாந்த சஞ்சிகை "நீதி முரசு 77"வெளயீட்டுவிழா ஞாயிறு (21-5-78) மாலை 5மணியளவில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் நடை பெறவுள்ளது. இவ் வெளியீட்டு விழாவில், யாழ் வளாகம் எதிர் சட்டக் கல்லூரி—விவாத அரங்கம், கவியரகம், நாட்டிய நாடகம், இசை நிகழ்ச்சிகள் முதலான சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன;

சட்டக் கல்லூரித் தமிழ் மன்றம் ,77 செயற் குழுவினர் தமிழ் மக்கள் அனைவரையும் இவ் விழாவில் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றனர்.

---

## படியுங்கள் சிரியுங்கள்

"தமிழ் மக்களை முன்னேற்றுவதற்காக 'தனிநாடு. கேட்கிறோம் என்று (கூட்டணியினர்) கூறுகிறார்கள். இதை பாராளுமன்றத்தில் கூறுவதற்கு தைரியமில்லாது பாராளுமன்றத்தில் அஹிம்சை வழியென்கிறார்கள்!"

—கே. டபிள்யூ. தேவநாயகம் (தினகரன் 16-5-78)

"பாராளுமன்றத்தில் எங்களுக்கு விடுதலைதாருங்கள் என்று (கூட்டணியினர்) கேட்கிறார்கள்,"

—கே. டபிள்யூ. தேவநாயகம் (தினகரன் 16-5-78)

"தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மக்களை ஏமாற்றிய காலம் முடிவடைந்து விட்டது! இனியும் இவர்களால் மக்களை ஏமாற்றமுடியாது.

—கே. டபிள்யூ. தேவநாயகம்(தினகரன் 16-5-78)

"நான் செல்கின்ற வழியும் ஒன்றுதான் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் செல்கின்ற வழியும் ஒன்றுதான்!"

—கே. டபிள்யூ, தேவநாயகம் (தினகரன், 16.5.78)

மயங்கி விழுந்துவிடாதீர்கள்; இவ்வளவும் ஒரே கூட்டத்தில் திரு. தேவநாயகம் திருவாய்மலர்ந்தவைதான்!

---

## ஆறு ஆண்டுகளுக்கு முன்பு செல்லத்தம்பு விடுத்த எச்சரிக்கை!

'தமிழர் கூட்டணியின் சமாதான முயற்சிகளும் தோல்வியடைந்தால் எத்தகைய சக்திகள் தமிழர் கூட்டணி வகித்த இடத்தை நிரப்பும் என்பதை எண்ணிப்பார்க்கவே அஞ்சுகிறேன். பிரிவினைக் குரல் பலமாகக் கேட்கத் தொடங்கி விட்டது."

"தமிழ் சத்தியாக்கிரகிகளுடன் பேசுவதற்கு தாம் தயாரில்லை என்று இச்சபையில் வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சர் (இலங்கரத்தின) பேசியபோது நான் மிகவும் வருத்தமடைந்தேன்."

"நான் அமைச்சருக்கு எச்சரிக்கை விடுகிறேன். தந்தை செல்வநாயகம் தலைமையில் இயங்கும்தமிழ் சத்தியாக்கிரகிகளுடன் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள அவர் தயாராக இல்லையென்றால்,— வேறு தலைமையின் கீழ் தமிழ் பயங்கரவாதிகளுடனும் புரட்சியாளர்களுடனும் அவர் பேச்சுவார்த்தை நடத்தவேண்டி நேரிடலாம். இந்தத் தமிழ் புரட்சியாளர்கள் 1971ம் ஆண்டு கலவரம் செய்த சிங்களப் பயங்கரவாதிகளைப் போலன்றி, அமைச்சருடன் சமாதானம் பேசுவதற்கே மறுத்துவிடலாம்—தமிழ் இனத்தினருக்கு இன்றுள்ள மனநிலை இதுதான்!"

நீங்கள் குறிப்பிட்ட ஓர் அரசியல் இயக்கத்தை அழிப்பதில் ஒருவேளை வெற்றிபெறலாம். ஆனால், ஓர் இனத்தை அழிப்பதில் ஒருபோதுமே வெற்றி பெற முடியாது. இதில் உங்களுக்கு ஏதாவது சந்தேகமிருந்தால், தயவுசெய்து சரித்திரத்தைப் புரட்டிப் பாருங்கள்!

—1972ம் ஆண்டு டிசெம்பர் கடைசியில் தேசிய அரசுப்பேரவையில் அன்றைய வவுனியா பா. உ. திரு. சே. மா. செல்லத்தம்பு கூறியது.

●

## அவரது இலட்சியமும் தனித்தமிழ் நாடுதானா?

"தமிழ் மக்களின் விடயத்தில் நான் ஒரு வழியில் சென்றாலும், தமிழர் விடுதலைக்கூட்டணியினர் வேறு வழியில் சென்றாலும் சந்திக்கப் போவது ஓரிடத்தில் தான், மட்டக்களப்புக்கு கண்டி மார்க்கமாகவும் வரலாம்—பொலனறுவை மார்க்கமாகவும் வரலாம் அது போல்தான் இதுவும்!"—

—அமைச்சர் கே.டபிள்யூ. தேவநாயகம்
(தினபதி 16-5-78)

---

## அன்று வாழ்த்து; இன்று வசை
### அமைச்சர் தேவாவின் இரட்டை நாக்கு!

"1956ம் ஆண்டு முதல் அவர்கள் (தமிழர் விடுதலைக் கூட்டணியினர்) தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்றார்கள்!"

—செங்கலடி மஞ்சள் வெள்ளிக் கழகத்தினரின் விளையாட்டு விழாவில் அமைச்சர் கே. டபிள்யூ. தேவநாயகம் (ஆதாரம் தினபதி 16-5-78)

Dear Mr. Chelvanayakam,

Tomorrow you are completing 25 years of devoted service to Tamils of this Country. I offer my sincere felicitations on this occasion. Whatever rights are if any left to this Community, it is because of your determined stand and unwavering leadership. May the almighty spare many more of your years in the service of your people.

Yours Sencerely
(sgd.) K. W. Devanayagam.

(Message sent by Mr. K. W. Devanayagam on 16-12-1974 to late Mr. S.J V. Chelvanayakam in connection with the Silver Jubilee of the Ilankai Tamil Arrsu Kadchi,)

அன்புள்ள செல்வநாயகம்,

இந்நாட்டுத் தமிழ் மக்களுக்கு பரித்தியாகத்துடன் நீங்கள் செய்து வரும் தொண்டு, நாளையுடன் 25 ஆண்டு நிறைவு பெறுகிறது. இந்தச் சமயத்தில் எனது உளமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த சமுதாயத்துக்கு ஏதாவது உரிமைகள் எஞ்சியிருக்குமானால், அதற்குக்காரணம் உங்கள் உறுதியான நிலையும் ஈடாட்டமில்லாத தலைமையும்தான்! உங்கள் மக்களுக்கு இன்னும் பல்லாண்டுகள் நீங்கள் சேவை செய்ய இறைவன் அருள்வானாக.

—உங்கள் உண்மையுள்ள
கே. டபிள்யூ. தேவநாயகம்

(1974 டிசெம்பரில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வெள்ளிவிழா நடைபெற்றதை யொட்டி 16-12-74ல் அமரர் தந்தை செல்வாவுக்கு இன்றைய அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் அனுப்பி வைத்த வாழ்த்துக் கடிதம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சஞ்சிகைகள் இங்கு வளராததற்கு இந்திய சஞ்சிகைகள் இறக்குமதிதான் காரணமா?

நமது ஈழத்து இலக்கியத்தின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக இருக்கக் கூடாது. என்று விரும்புகின்ற வாசகர்களில் நானும் ஒருவன், ஏன் நான் இதனை முதலில் கூறிக் கொள்கின்றேன் என்றால், போலிக் கோஷமெழுப்பத் தெரியாதவர்கள், 'மண் வாசனை புரியாதவன்' 'நாட்டுப் பற்றற்றவன்' இன்னும் பல கை வசமுள்ள வசனங்களால் நான் இங்கு எழுதப் போவதைப் படித்த பின் தீர்புத் தீர்க்கக் கூடாது என்பதற்காகத்தான்.

இலங்கையில் பத்திரிகை இறக்குமதி விடயங்களில் போராட்டம்செய்யும்போது இது விடயமாக வீணை அலட்டிக் கொள்ளும்போது, அவற்றுக்கு ஆதாரமாக எழுதி வைத்துக் கொண்டுள்ள வசனம், அழுத்தமாகச் சொல்லிக் கொள்கின்ற சொல், 'குப்பைகள்' கூழங்கள்; என்பதுதான்.

சரி இவர்கள் கூறுகின்றபடி ஒத்துக் கொள்வோம். குப்பைகள், கூழங்கள் என்பதை ஒத்துக்கொள்வோம். அஃது தென் இந்தியாவிலிருந்துதான், அங்கு மட்டுமிருந்துதான் இலங்கையில் வந்து குவிகின்றன என்று பயந்தாங் கொள்ளிக் கோசத்தை—மன்னிக்க வேண்டும் நான் மேலே ஒத்துக் கொள்வோம் என்று எல்லோரையும் சேர்த்துச் சொல்லி விட்டேன். நான் ஒத்துக்கொண்டாலும் இதனைப் பலர் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். குறுகிய வட்டத்துக்குள்ளே நின்று சிந்தித்துப் பழக்கமில்லாத படிப்பாளிகள்—படைப்பாளிகள் தென் இந்தியாவை மட்டும் போட்டுக் குழப்பிக் கொண்டிராமல் கொஞ்சம் விரிவான வட்டத்திற்குள் நின்று இந்த குப்பைகள் கூழங்களைப்பற்றி ஆராய்தல் நலமென சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

ஆசைகள் இல்லாத மனமும் இல்லை, அதனால் ஆக்கப்பட்ட வேசிகள் இல்லாத உலகமும் இல்லை என்று சொல்வார்கள்., ஆகையால் "தென் இந்தியாவில் இலக்கியம் என்ற பெயரில் குப்பை கூழங்கள் பெருகி விட்டன" என்று கூறுவது மிகத் தவறு.

தென் இந்தியாவில் குப்பைகள்—கூழங்கள் மலிந்து விட்டாலும் சரி—அல்லது அந்தக் குப்பை கூழங்கள் இலங்கைக்கு வந்தாலும் சரி எதற்காக இவர்கள் வீணை அலட்டிக் கொள்கின்றார்கள் என்பது தான் விளங்கா நிலையிலுள்ளது.

குப்பை கூழங்களைப் புறக்கணிப்பதும் நல்லவைகளைத் தேர்ந்தெடுப்பதும் வாசகர்களைப் பொறுத்த விடயம் அல்லவா?

தென் இந்தியாவிலிருந்து குப்பை கூழங்கள் இலங்கையில் வந்து குவிந்த காலத்திலும் சரி குவியாத காலத்திலும் சரி வாசகர்கள் இனங்கண்டு தான் புத்தகங்கள் வாங்குகின்றார்கள். இலங்கைப் பத்திரிகைகளில் நல்லவைகளை இன்றும் வாங்கிக் கொண்டுதானிருக்கின்றார்கள்.

நான் ஒரு புத்தகக் கடைக்காரரை நெருங்கினேன், எப்படி இந்தியப் பத்திரிகைகள் நல்லா விற்பனையாகுதா" என்று கேட்டேன்.

"அதை ஏன் தம்பி கேட்கிறீர்கள். ஏதோ விற்குமென்றுதான் ஏஜெண்டுகளிடம் அதிகமாக புத்தகங்களை வாங்கிப்போட்டன் இரண்டு முறை ஏதோ ஆசையால் வந்து வாங்கிற்றுப் போறவங்கள் பிறகு வந்தா அந்தப் புத்தகங்களை தொட்டுக் கூடப்பார்க்க மறுக்கிறார்கள். வெகுநேரங்களாக நின்று இங்கு பரப்பி வைத்துள்ள புத்தகங்களைப் பார்வையிட்டு சில புத்தகங்களின் முன்னுரைகளை உள்ளுறைகளை படித்துப்பார்த்து தெரிவு செய்து ஒன்றிரண்டு வாங்கிப் போகின்றார்கள். நானும் ஒரு இலக்கிய நெஞ்சமென்ற படியால் ஆத்திரம் வந்தாலும் பொறுத்துக் கொள்ளத்தானே வேண்டும் நாம் விற்பனைக்கு வைத்துள்ளோம் என்பதற்காக அவர்கள் எல்லாவற்றையும் வாங்குவார்களா...? அவர்களும் நல்ல கலையம்சம் நிறைந்த புத்தகங்களை கருத்தாழமுள்ள படைப்புகள் நிறைந்த புத்தகங்களைத்தானே வாங்க வேண்டும். நான் வியாபாரி, அவர்கள் வாசகர்கள்!

இப்படி ஒரு நீண்ட ஓர் உரையைக் கூறிமுடித்தார் அந்தப்புத்தகக்கடைக்காரர். இதிலிருந்து நாம் ஒன்றைத் தெட்டத்தெளிவாக விளங்கிக் கொள்ளவேண்டும், பத்திரிகை உலகில் தனது கையாலாகாத் தனத்தைக் காட்டிக்கொள்ளக் கூடாது என்பதற்காக சில பத்திரிகாசிரியர்களும் இவர்களுக்கு 'சிங் சக்' போடுகின்ற குழுக்களும் எழுப்புகின்ற மூடுதிரைக் கோசமே 'தென் இந்திய சஞ்சிகைகளின் இறக்கு

காலயுக்தன்

மதி ஈழத்துக் கலை இலக்கியத்திற்கு பெரும் பாதிப்பு" என்ற கோஷம். இந்த கோஷம் எழுப்புகின்றவர்கள், தென் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இவர்கள் கூறுகின்றபடி 'குப்பைகள் கூழங்கள்" வராதிருந்த காலத்தில், வாசகர்கள் சொல்லிக் கொள்ளாமல் தங்களுக்கு தாங்களே பட்டம் சூடிக்கொண்ட இந்த நல்லதுகள் பெற்ற நயம் என்ன...?

கோஷங்கள் போட்டு தென் இந்தியாவிலிருந்து சஞ்சிகைகளை வராமல் தடுத்து நிறுத்துவதிலே மட்டும் தமது முழுக் கவனத்தையும் செலுத்தினார்களே தவிர—

ஏதோ ஒரு வித திருப்தி என்ற வகையில் நீண்ட ஒரு பெருமூச்சு விட்டு நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தார்களே தவிர—குப்பைகள்— கூழங்கள் —என்ற சொல்லை இப்போது பாவிப்பதற்கு மீதமாக வைத்துக் கொண்டிருந்தார்களே தவிர —வெளிநாடுகளில் பத்திரிகைத் துறைக்கு வெளியீட்டுத்துறைக்கு உள்ள வாய்ப்புகள் போல வசதிகள் போல இங்கு ஆக்கிக் கொள்ள ஆக்கப் பணிகளில் ஈடுபடாமலே இருந்தார்கள்.

இங்கேதான் முக்கியமிருக்கின்றது. இங்கேதான் பத்திரிகைத் துறையின் ரகசியம் இருக்கின்றது. நான் எப்போதோ இலங்கையில் வெளியாகும் ஒரு "நூலில்" படித்த ஞாபகம்; அது ஒரு கேள்விபதில் பகுதி.

## நல்லது எது கெட்டது என்பதை தீர்மானிப்பவன் வாசகனே!

'நீங்கள் ஏன் தங்கள் பத்திரிகையில் ஓவியக் கலைக்கு இடம் கொடுப்பதில்லை' என்று ஒரு வாசகர் கேள்வி கேட்டிருந்தார் அதற்குப் பத்திரிகாசிரியர்,—இலங்கையில் வாழும் சிறுபான்மை மக்கள் பெரும்பான்மையினர் ஆட்சியிடம் எங்களுக்கும் பிரச்சினைகள் இருக்கு என்று கூறும்போது இல்லை அது பிரிவினை என்று வியாக்கியானம் கொடுத்து விளையாடியதுபோல பதில் கொடுத்திருந்தார்.

"பத்திரிகைக்குப் படம் போட்டுக் காட்டுவது கூடாது" என்ற தோரணையில் அதற்கும் ஒரு வியாக்கியானம் கொடுத்து பதில் சொல்லியிருந்தார். ஒரு பத்திரிகை சிறப்பாகஇருக்க என்ன என்ன அம்சம்தேவை என்பதை அறியாத வெறும் வெற்று வேட்டுக் கோசங்கள் எல்லாம் பத்திரிகை நடத்தினால் எப்படி இலங்கையில் பத்திரிகைத் துறை முன்னேறும்?

படம் போட்டுக் காட்டுவது பத்திரிகைக்கு கூடாது என்பதோடு நின்றுவிடவில்லை. நின்றால் பரவா இல்லை, சொன்னதுபோல் செய்யவும் இல்லை. அதைச் சொல்லாமல் சும்மாவிட்டதும் இல்லை. கோழி முட்டைச் சைஸ் சித்திரங்களும் கொட்டப் பாக்கன் குருவிச் சைஸ் சித்திரங்களும் போடத் தொடங்கிவிட்டார்கள்;

இதிலிருந்து அந்தப் பத்திரிகையாசிரியர் ஒன்றை விளங்காமல் விளங்கியுள்ளார். ஏற்றுக்கொள்ளாமல் ஏற்றுக் கொண்டுள்ளார். பத்திரிகைக்கு ஓவியக்கலையும் அவசியம் என்பதைத் தான்.

பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டபின் பிச்சை எடுக்கத் தெருவுக்கு வந்துவிட்டபின் முக்காடு வேறு போட்டு முகத்தை மறைக்கவேண்டுமா?

எந்த நாட்டிலிருந்து எவ்வகையான குப்பை கூழங்கள் வந்து குவிந்தாலும் அதற்காக நேரத்தையும் காலத்தையும்வீணாக்கி இதற்காக மேடைகள் பலவற்றை பழுதாக்கி குய்யோ முறையோ என்று கோசம் போடுபவர்களுக்கு ஒரு எடுத்துக் காட்டாய விளங்கும் வீர கேசரி ஸ்தாபனத்தின் நிர்வாக அதிகாரியும் வீரகேசரி பிரசுரங்களின் பதிப்பாளருமான திரு.சி.பாலச்சந்திரன் அவர்கள் 'தென் இந்திய சஞ்சிகைகள் பிரசுரங்களின் இறக்குமதியும் ஈழத்து இலக்கியத்தின் மீதான பாதிப்பும்" எனும் தலைப்பில் கூறிய கருத்துரை ஒன்றை மீண்டும் சுட்டிக்காட்டி காட்ட விரும்புகின்றேன்.

"இந்தியச் சஞ்சிகைகள் ஈழத்தில் பெருமளவு வரவேற்கப்படுவதற்கு முக்கிய காரணங்களாக அவற்றின் வெளிக்கவர்ச்சியும் குறைந்த விலையும் உள்ளன. ஈழத்தின் வெளிவரும் சஞ்சிகைகளில் வெளிக்கவர்ச்சி போதாது"

குறைந்த விலையில் இலங்கைச் சஞ்சிகைகள் இருந்தாலும், வெளிக்கவர்ச்சி இல்லாத குறையோடு உள்கவர்ச்சி இல்லாத குறையோடு எஸ். பொன்னையாப்பிள்ளை அன் சன்ஸ் வெளியிடும் வெறும் சினிமாப் பாட்டுப் புத்தகம் போல அதாவது அதன் உள் நிலைபோல வெறும் மொட்டைச் சம்புராப் போல சஞ்சிகையை வெளியிட்டு, ஒரு மாதம்—ஒரு ஊரில்—ஒரு கடையில் பத்துப் பன்னிரண்டு பிரதிகள் விற்பனை செய்ய முயற்சிப்பது தான் பெரும்பாடாய் நினைத்து, "சஞ்சிகை வெளியிடுவதில் இருக்கும் சங்கடம் — நெருக்கடி என்பன சஞ்சிகை வெளியிடுபவனுக்குத்தான் தெரியும்" என்று ஏதோ பத்திரிகைத் துறையில் பெரிய சாதனை செய்து நிலை நாட்டியவர் போல குப்பையென்றும் கூழம்என்றும் சப்பை கொட்டிக் கொண்டிருந்தால்......

1972ம் ஆண்டுக்கும் 1977 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தென் இந்தியப் பத்திரிகைகள் இங்கு வராமல் தடைப்பட்டது போல பத்திரிகை உலகில் ஆயுள்காலம் பூராவும் தடைப்பட்டிருந்தாலும் நிச்சயமாக இந்த குப்பை கூழங்களால் பத்திரிகை உலகில் நிலையான வெற்றியைக் காணமுடியாது.

ஆகையால் இவைகளையெல்லாம் விட்டுத் தள்ளி குப்பைகூழக்கோசம்போடாமல் எங்கெல்லாம் நம்நாட்டுச் சஞ்சிகைகளை அனுப்ப முடியுமோ அங்கெல்லாம் அனுப்பி அந்த அளவுக்கு அழகாகவும் சிறப்பாகவும் வெளியிட்டு வெளியில் இருந்துவரும் சஞ்சிகைகளோடு போட்டிபோட்டு விற்பனை, செய்யக்கூடிய தரத்தை அடையபாடுபடுவோம்!

---

# மக்கள் குரல்

## திருமலை நகரசபையில் நரகல் தமிழர்களா?

திருக்கோணமலை நகரசபையில் நகரசுத்தி தொழிலாளரை வேலைக்கு அனுப்பும் முறையை 21-4-78 அன்று காலை காணும் வாய்ப்பு கிடைத்தது. அந்தோ அங்கே தமிழனின் தன்மானத்திற்கு கரி பூசும்காட்சியையும் தமிழ் பண்பாட்டிற்கு சிறிதும் பொருந்தாத வார்த்தைகளையும் பார்த்தும் கேட்டும் நெஞ்சு பொறுக்காமல் இதனைஎழுத வேண்டிய சூழ் நிலைக்குத் தள்ளப்பட்டேன்.

"சாதியிலே நாங்க
தாழ்ந்தவங்க
நாங்க இல்லேன்னா ஊர்
என்ன ஆகுமுங்க"

என்ற ஒரு பழைய சினிமா பாடல் என் ஞாபகத்திற்கு வந்தது நகரசுத்திதொழிலாளரின் தியாக மனப்பான்மையை எந்த வார்த்தைகளாலும் விளக்கிட முடியாது அப்படிப்பட்ட அவர்களைத் தரக்குறைவாக பேசுவது, பேசுபவர்க்கு பெருமையாக இருக்கலாம் ஆனால் அது எமது இனபெருமைகளை குழிதோண்டி புதைக்கும் ஓர் இழிவான செயல் என்பதை என்னால் திட்டவட்டமாக கூறமுடியும். ஏன் எம்மை அன்னிய இனத்தவன் அடிக்கிறான், உதைக்கிறான் வெட்டுகிறான், உயிரோடு எரிக்கிறான் என்றால் எம்மிடையே! இருக்கும் இந்த இழிநிலையை அறிந்து தான், எம்மவருக்கு நாம் தரமறுக்கும் சுதந்திரத்தை மாற்று இனத்தவனிடம் எதிர்பார்ப்பது எத்தனை தவறு! என்பதைமேற்கூறிய "நரகல் தமிழர்கள்" உணர வேண்டும்.

ஏ தமிழா முதலில் நீ உன்னை விடுவித்துக்கொண்டு பிறகு விடுதலை கேள்! உன்னை சிறையில் பூட்டி வைத்துக்கொண்டு எப்படி விடுதலை பற்றி பேசுகிறாய்? ஆவணி அமளிகளை எண்ணிப் பார் இனியாவது உன்னை உன் சகோதரனை தரக்குறைவாக பேசுவதை தவிர்த்து பெருமைபெற்ற உன் இனத்தை சிறுமைசெய்யும் செயல்களை மறந்து விடு இது விடுதலை விரும்பிகளின் வேண்டுகோள்.

—லாசறஸ்
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறை இயக்கங்களுக்குத் தடை!

# மீறினல் ஏழாண்டு கடுழிய சிறை!

## ஓராண்டுக்கு குறையாத தடுப்புக்காவல்!
## அரசு கொண்டுவருகிறது புதிய சட்டம்!

மே 18 வியாழன்—

'தமிழீழ விடுதலைப்புலிகள்' என்று கூறப்படும் இயக்கத்தையும், மற்றும் அதுபோன்ற தீவிர இயக்கங்களையும் தடை செய்யும் சட்ட மூலமொன்று இன்று வியாழக்கிழமை சிறீலங்கா தேசியஅரசுப் பேரவையில் அரசாங்கத்தினுல் அவசர அவசரமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

நீதியமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் இந்தச் சட்டமூலத்தை தாக்கல் செய்கிறுர்.

இச்சட்டமூலத்தின்படி வன்செயல்களில் ஈடுபடுவோரை அல்லது ஈடுபடும் இயக்கங்களை தடைசெய்ய சிறீலங்கா ஜனுதிபதிக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

எந்தஒரு வன்செயல் இயக்கமானது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பலாத்காரத்தில் ஈடுபட்டால், அல்லது தூண்டினுல், அல்லது தூண்டுவதாகக் கருதப்பட்டால், அதனை உடனடியாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் தடை செய்ய புதிய சட்ட மூலங்கள் ஜனுதிபதிக்கு அதிகாரம் வழங்குகின்றன.

### அப்பீல் கிடையாது

தடைசெய்யப்படும் இயக்கத்தவர்களுக்கும் இயக்கத்தோடு தொடர்பு கொண்டிருப்போருக்கும் மாவட்ட நீதிமன்றங்களின் மூலம் ஏழு ஆண்டு சிறைத்தண்டனை வழங்கவும், அவர்களின் அனைத்து சொத்துக்களை பறிமுதல் செய்யவும் புதிய சட்டமூலம் வழிவகுக்கிறது. இவர்களுக்கு வழங்கப்படும் தண்டனையை எதிர்த்து மேன் முறையீடு செய்யும் உரிமையும் கிடையாது.

### தடுப்புக்காவல்

அதேசமயம் தடைசெய்யப்படும் இயக்கங்களை சேர்

—5-ம் பக்கம் பார்க்க


## கிங்ஸ்லி
(கொழும்பு)

மாதர்குல மாணிக்கம்

## கெப்பிட்டல் (கொழும்பு)
5-வது வாரம்

எம். ஜி. ஆர்., ஜெயலலிதா விஜயகுமாரி நடித்த-

கணவன்

(புதிய கொப்பி)

## வெலிங்டன்
10-வது வாரம்

(யாழ்நகர்)

சிவாஜி, கே. ஆர். விஜயா நடித்த—

கிரகப்பிரவேசம் (கலர்)

## லிடோ (யாழ்நகர்)
19ம் திகதி முதல்

சிவகுமார், ஹிந்தி நடிகை அலகா, ஸ்ரீகாந்த், மஞேரமா நடித்த-

மதனமாளிகை (கலர்)

## செல்லமகால்
(கொட்டாஞ்சேனை)

12-வது வாரம்

எம். ஜி. ஆர். (இரு வேடங்களில்)
வாணிஸ்ரீ, நிர்மலா, பி. எஸ். வீரப்பா,
தேங்காய் ஸ்ரீனிவாசன் மற்றும் பலர் நடித்த—

ஊருக்கு உழைப்பவன்



## கெயிட்டி
3-வது வாரம்

[கொட்டாஞ்சேனை]

முத்துராமன், அசோகன், தேங்காய் சீனிவாசன், விஜயகுமார், சந்திரகலா, ஸ்ரீவித்யா, மஞேரமா, விஜயசந்திரிகா

ஆகியோர் நடித்த—

காலங்களில் அவள் வசந்தம்

திரைக்கதை வசனம்:- பஞ்சு அருணசலம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 12, 194 ஏ, பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு